பதிவு எண்: ம. 6811 ★ தொலைபேசி: 51881 ஸ்தாபிதம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 12 (27—7—68) சனி ★ வெளியூர்: ஆடி 13 (28—7—68) ஞாயிறு [இதழ்: 37

மத்திய அரசு ஊழியர் தேர்வு

வட்டார மொழியில் எழுத ஏற்பாடு

புதுடில்லி, ஜூலை 26—

"மத்திய அரசு ஊழியத் தேர்வுக் குழு ஆராய்ந்து வகுத்த முறையின்படி 1969-ல் நடைபெறவிருக்கும் மத்திய அரசு பொதுப் போட்டித் தேர்வுகளில் சில பாடங்களுக்கு மட்டும், வேட்பாளர்கள் விரும்பும் எந்த வட்டார மொழியிலும் தேர்வு எழுதலாம் என்ற திட்டத்தைப் பரிசார்த்தமாகச் செயல்படுத்தலாம் என்று அரசு கருதியிருக்கிறது" என உள்துறைத் துணையமைச்சர் சுக்லா, நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் தாய்மொழியில்பேச உரிமை

அரசியல் சட்ட 120-வது பிரிவைத் திருத்துக

மக்களவையில் இரா. செழியன் மசோதா-'சனநாயகம் செழிக்க இது அவசியம்' என வற்புறுத்தல்

புதுடில்லி, ஜூலை 26—

"உறுப்பினர்கள் யாரும் தத்தம் தாய்மொழியில், நாடாளுமன்றத்தில் பேசும் உரிமையளிக்கும் வகையில் அரசியல் சட்டத்தின் 120-வது பிரிவைத் திருத்த வேண்டும்"

என்று தீர்மானம் ஒன்றை, கழக உறுப்பினர் இரா. செழியன் மக்கள் சபையில் தாக்கல் செய்திருக்கிறார்.

அரசியல் சட்ட 120-வது பிரிவின்படி, தற்பொழுது நாடாளுமன்றத்தில் இந்தியிலோ, ஆங்கிலத்திலோதான் நடவடிக்கைகள் நடைபெறவேண்டும்; இந்த இரு மொழிகளும் அறியாதவர்கள் அவைத் தலைவரின் அனுமதியின்பேரில் தமது தாய்மொழியில் பேசலாம்.

திரு. இரா. செழியன் பேசுகையில் கூறியதாவது:—

"எந்த உறுப்பினரும் தத்தம் தாய்மொழியிலும் பேசலாம் என்று ஏற்படும் நாள் ஒரு மகிழ்ச்சியான நாளாகும்.

இந்தியோ, ஆங்கிலமோ தெரியாதவராயிருந்தாலுங்கூட, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், 10 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களின் பிரதிநிதியாவார். தற்பொழுது அந்த உறுப்பினர், தனக்கு இந்தியோ ஆங்கிலமோ தெரியாது என்பதை அவைத் தலைவர் நம்பச் செய்ய வேண்டும்."

அவைக்குத் தலைமை வகித்த துணை அவைத் தலைவர் காடில்கர், 'தற்பொழுது உறுப்பினர்கள் தத்தம் தாய்மொழியில் பேச அனுமதிக்கப்படுகிறார்கள்' எனக் குறிப்பிட்டதற்கு திரு. இரா. செழியன் கூறியதாவது:—

'இந்த உரிமை அரசியல் சட்டத்தில் எழுதப்படவேண்டும்.

"சனநாயகம் செழுமையாகச் செயல்பட வேண்டுமானால், உறுப்பினர்கள் தங்கள் தாய்மொழியில் பேச முழுச் சுதந்தரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்."

விவாதத்தில் கலந்துகொண்ட காங்கிரசு உறுப்பினர் சிகோ நாராயணன் என்பவர், 'வட இந்தியர் தென்னாட்டு மொழி ஒன்றினையும், தென்னாட்டினர் இந்தி மொழியையும் கற்றுக்கொண்டால் தான் மொழிப் பிரச்சினை தீரும்' என்றார்!

விவாதம் இன்னும் முடிவடையவில்லை; ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

சவுக்குப் பயிரிடுவோருக்கு நிபந்தனை!

கிராம அதிகாரியிடம் சான்றிதழ் பெற்று விற்கவேண்டும்

சவுக்குப் பயிரிடுபவர்கள், தங்களது சொந்த நிலத்தில் அல்லது தங்களுக்குத் தொடர்புள்ள நிலத்தில் பயிரான சவுக்கை விற்பனை செய்யும்பொழுது, அது, தாங்கள் சொந்தமாக உற்பத்தி செய்தது என்று ஒரு கடிதமும், கிராமத் தலைமை அதிகாரியிடமிருந்து அவ்விதம் பெறப்பட்ட ஒரு சான்றிதமும் அந்தச் சரக்குடன் அனுப்ப வேண்டும்.

சவுக்குப் பயிரான நிலத்தின் அளவு -- அந்த நிலம் அனுப்புபவருக்கு உரிமையானதா, குத்தகையா என்ற தகவல்கள் -- சர்வே எண் -- கிராமத்தின் பெயர் -- பயிரான பரப்பு -- பயிரின் கால அளவு -- ஏக்கர் ஒன்றுக்குக் கிடைக்கக்கூடிய சவுக்கு -- ஆகிய விவரங்கள் அந்தச் சான்றிதழில் அடங்கியிருக்கவேண்டும்.

அத்துடன், கிராமத் தலைமை அதிகாரியின் முத்திரையைக் கொண்டதாகவும் அது இருக்க வேண்டும்.

பின்தங்கிய மாவட்டங்களில் பாசன வசதி

தமிழக அரசின் மூன்றுண்டுத் திட்டம்

திருச்சி, ஜூலை 26—

"தமிழகத்தில் பின்தங்கிய மாவட்டங்களின் பாசன வசதியை, கிணறுகள்—குழாய்க் கிணறுகள்—வடிகால் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டி, மேம்பாடடையச் செய்வதற்குத் தமிழக அரசு, மூன்றுண்டுத் திட்டம் ஒன்று தயாரித்துள்ளனர்.

"பாசன வசதிகளைச் செய்வதற்கு ஏற்படும் செலவில் 25-சத பங்கையோ அல்லது ரூ. 500-ரொக்கமோ -- அதாவது, இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அதை -- விவசாயிகளுக்குக் கொடுத்து உதவுவதென்று அரசு தீர்மானித்திருக்கிறது"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"முதலில் இந்தத் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் அமுல் நடத்தப்படும்; பிறகு மற்ற மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

"மேட்டூர் அணையிலிருந்து இந்த ஆண்டு தாமதித்துத் தண்ணீர் விடப்பட்டதால், 6-இலட்சம் ஏக்கர் குறுவை பயிருக்குத்தான் பாசன வசதி தர முடிந்தது. 9 இலட்சம் ஏக்கருதகுப் பாசன வசதி அளிப்பதென்று அரசு முதலில் எண்ணியிருந்தது.

"மதுரை, கோவை, சேலம் மாவட்டங்களில் மொத்தத்தில் 50,000 ஏக்கர் காட்டு நிலம், நிலமற்ற விவசாயிகளுக்குப் பயிர் செய்வதற்காகக் குத்தகைக்குத் தரப்படும்.

"விவசாயத்திற்குத் தகுதியுள்ள காட்டு நிலங்கள், மாவட்டங்களில் எவ்வளவு கிடைக்கும் என்பதுபற்றி விவரம் தெரிவிக்குமாறு கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்."

நில அடமான பாங்கிகள்மூலம் விவசாயிகட்குக் கடன் வசதி

திருச்சி, ஜூலை 26—

"தமிழக அரசு நிர்ணயித்துள்ள இலக்கின்படி இவ்வாண்டில் விவசாயிகளுக்கு நில அடமான பாங்கிகள்மூலம் ரூ. 12 கோடிவரை கடன் வழங்கப்படும்"

என்று, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கூறினர்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"இவ்வாண்டில் விவசாயிகளுக்கு கடன் வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன; மனு தாக்கல் செய்த 33 நாட்களுக்குள் கடன் தொகைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது."

"விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப் பல வர்த்தக பாங்குகள் முன்வந்துள்ளன.

"விவசாயத் தொழில் கார்ப்பரேஷன்மூலம் விவசாயிகளுக்கு ரூ. 70 இலட்சம் செலவில் 409 டிராக்டர்கள் வழங்க அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது; இது தவிர, பம்பு செட்டுகளுக்காக, மொத்தம் ரூ. 1 இலட்சம் கடன் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது."

சனநாயகத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்!

கட்சிமாறிகட்கு அமைச்சர்பதவி கருவியாக இருக்கிறது

நாடாளுமன்றத்தில் இரா. செழியன் கருத்து

அரசியல் சட்டத்தைத் திருத்த மசோதா வரும்

புதுடில்லி, ஜூலை 26

"சனநாயகத்தில் மக்கள் நம்பிக்கை இழக்காமலிருக்கச் செய்வதற்கு, ஏதாவது செய்யவேண்டிய காலம் நெருங்கிவிட்டது! கட்சி மாறுபவர்களைக் கவரும் ஒரு கருவியாக அமைச்சர் பதவிகள் அமைந்துவிடக் கூடாது. எனவே, சட்டமன்றக் கட்சிகளின் பலத்தை முடிவு செய்ய ஒரே சீரான கொள்கை அவசியமாகும்"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்கள் கருத்தறிவித்தார்.

மத்திய—மாநில அமைச்சரவைகளில் அமைச்சர்களின் எண்ணிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முறையில் அரசியல் சட்டத்தின் 74, 163-வது பிரிவுகளைத் திருத்த வேண்டுமென்று ச. சோ. உறுப்பினர் மது லிமாயியால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஒன்றின்மீது பேசுகையிலேயே திரு. செழியன் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

"இது தொடர்பாக அரசே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவிருக்கிறது" என, சட்ட அமைச்சர் பி. கோவிந்த மேனன் உறுதி கூறிய தன் பேரில், மது லிமாயி, தனது தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

விவாதத்தில் கலந்துகொண்ட பல உறுப்பினர்களும் அமைச்சர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

யாரையும் அமைச்சராக ஏற்றுக்கொள்ளும் அமைச்சரவைகளை மக்கள் விரும்பமாட்டார்கள் என்றும், ஆகையால் இதைக் கண்காணிக்காமல் விட்டுவிடுவோமானால் சனநாயகம் ஆபத்திற்கு உள்ளாகும் என்றும் சட்ட அமைச்சர் கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் சிறிய அமைச்சரவையை அமைத்து ஒரு வழி காட்டியாக அமைந்திருக்கும் அண்ணா அமைச்சரவையினைப் பல உறுப்பினர்களும் பாராட்டியிருக்கின்றனர்.

சுயேச்சை உறுப்பினர் டி. விசுவநாதன் பேசுகையில், 'தற்பொழுதைய மத்திய அரசு 30 அமைச்சர்களைக்கொண்டே திறமையாக இயங்கமுடியும்' என்று சுட்டிக் காட்டினர்.

தஞ்சை மாவட்டத்தில் பாசனத் தட்டுப்பாடு?

அமைச்சர் கருணாநிதி விரைகிறார்

சென்னை, ஜூலை 27—

ஜூலை 7-ஆம் நாளன்று விடப்பட்ட மேட்டூர் அணை தண்ணீர், தஞ்சை மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் பாசனத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை என்ற முறையீடு குறித்து விசாரணை செய்து ஆணைபிறப்பிக்கப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், ஜூலை 29-ம் நாளன்று தஞ்சை மாவட்டத்திற்குச் செல்கிறார்.

அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமைப் பொறியாளர், மற்றும் சில அதிகாரிகளுடன் குறிப்பிட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று முறையீடுகளைக் கவனித்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

படும் என்று அரசு அளித்திருந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும்" என்பது அவர்களின் கோரிக்கைகளாகும்.

பஞ்சாபில் டாக்டர்கள் போராட்டம்!

சண்டிகார், ஜூலை 27—

இரண்டுநாள் அவசர விடுமுறை எடுத்துத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்குமாறு பஞ்சாப் மாநில டாக்டர்கள் சங்கம் கேட்டுக் கொண்டதற் கிணங்க, பஞ்சாபில் எல்லா அரசாங்க டாக்டர்களும் நேற்று (வெள்ளி) கூட்டாக விடுமுறை எடுத்துக்கொண்டனர்.

"சம்பளம் மற்றும் வேலை நிலைமைகளால் திருத்தியமைக்கப்

(1-ம் பத்தி பார்க்க)

ஷில்லாங்கில் நாசவேலை?

தந்தி - போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிப்பு

ஷில்லாங், ஜூலை 25—
அசாம் மாநிலத்தின் தலைநகரான ஷில்லாங்கையும் - இந்தியாவின் பிற பகுதிகளையும் இணைக்கும் தந்தி போன்ற தூரப் போக்குவரத்துச் சாதனங்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன.

கடந்த பத்து நாட்களில் இது இரண்டாம் முறையாக நடைபெற்ற சம்பவம் ஆகும்.

இது நாச வேலையே என்று தாம் நிச்சயமாகக் கருதுவதாக அஞ்சல் - தந்தித் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார். இராணுவம், விமானப் படை உட்பட எல்லாவற்றின் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு, நேற்று நள்ளிரவு முதல் செயலற்றுக் கிடந்தன.

இருட்டில் நாசவேலைக்காரர்கள் பூமியைத் தோண்டி, பூமிக்கு அடியில் உள்ள தந்திக் கம்பிகளை 20 அடி நீளத்திற்குமேல் வெட்டிவிட்டனர். வெட்டப்பட்ட தந்திக் கம்பிகள், அந்த இடத்திலேயே கைவிடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

தந்திக் கம்பிகளை வெட்டும் இதே போன்ற ஒரு சம்பவம் ஜூலை 14-ம் நாள் இரவு இதே பகுதியில் நடைபெற்றுள்ளது.

எல்லைப்புறப் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த இரண்டு குழுக்கள் இந்தப் பகுதியில் 24-மணி நேரமும் ரோந்து வருகிறார்கள். பூமிக்கு அடியில் தந்திக் கம்பிகள் செல்லும் வழி முழுவதும் அவர்கள் ரோந்து சுற்றுகிறார்கள். அப்படியிருக்க, இந்தப் பகுதியில் அடுத்தடுத்து இதுபோல் நடந்திருப்பது பற்றி ஷில்லாங்கில் உள்ள அதிகாரிகள் வியப்படைந்துள்ளனர்.

கல்வித் துறைக்கு ஒரே இயக்குநர்

தமிழக அரசு ஆய்வு

சென்னை, ஜூலை 26—
பள்ளிகளின் கல்வித் துறையையும் கல்லூரிகளின் கல்வித் துறையையும் முன்பு இருந்தது போன்று ஒரே கல்வித் துறையாக இணைக்கும் திட்டமொன்றைத் தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இத்திட்டம் அமுலாக்கப்படுமானால், புதிய கல்வித் துறை இயக்குநருக்கு உதவியாக மூன்று கூட்டு இயக்குநர்கள் இருக்கக்கூடும். அவர்கள் முறையே கல்லூரி—செகண்டரி—துவக்கக் கல்விப் பொறுப்புக்களை ஏற்கக்கூடும்.

வேலையில்லாத் திண்டாட்டம் குறைய வாய்ப்பில்லை

படித்தும் வேலையற்றிருப்போர் தொகை பெருகுகிறது

புதுடில்லி, ஜூலை 25—
"சனவரித் துவக்க நாள் நிலவரப்படி, கல்வியறிவுபெற்ற 10,87,371-பேர், வேலை வாய்ப்புத் தகவல் நிலையங்களில், வேலை கோரி தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டுள்ளனர்"

என்று மக்களவையில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் எஸ். ஜி. ஜமீர் தெரிவித்தார்.

"பெரும் அளவில் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளபோதிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் கடுமை குறையும் அளவுக்கு வாய்ப்பு இல்லை"

என்றும் அமைச்சர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

தஞ்சாவூரில் விற்ற டிராக்டர்கள் காஷ்மீரில் காணப்படும் விந்தை!

தனிப்பட்ட விற்பனையாளர்களை ஒழிக்க இந்திய அரசு யோசனை

இரஷ்ய அரசு ஏற்காததால் இறக்குமதி லைசென்சு நிறுத்தம்

சென்னை, ஜூலை 26—
இரஷ்ய டிராக்டர்களுக்கு ஏஜென்சி தருவதில், இந்திய அரசின் வேளாண்மைத் துறைக்கும்—இரஷ்ய டிராக்டர் நிறுவனங்களுக்குமிடையில் தகராறு ஏற்பட்டு நீடித்துவருகிறது.

சென்ற வேளாண்மைப் பருவத்தில் 6,000 டிராக்டர்களை இறக்குதிமதி செய்வதென இந்திய-இரஷ்ய வர்த்தக ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், ஏஜென்சி தகராறில் இன்னும் ஒரு முடிவு ஏற்படவில்லை.

ஒவ்வொரு மாநிலத்திலும் விவசாய-தொழில் கார்ப்பரேஷனை இரஷ்ய டிராக்டர்களுக்கு ஏஜெண்டுகளாக நியமிக்க வேண்டுமென்று மத்திய உணவுத் துறை யோசனை தெரிவித்தது. செக்கோஸ்லேவேகியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்களை இந்த நிறுவனம் சில மாநிலங்களில் விற்று வருகிறது.

ஆனால், இரஷ்யா இந்த யோசனையை நிராகரித்துவிட்டது. இந்த நிறுவனம் விற்பனை நிலையங்களையும், டிராக்டர்களைப் பழுது பார்க்கும் நிலையங்களையும் பரவலாக ஏற்படுத்தவில்லை என்பது, இதற்கு இரஷ்யா கூறும் காரணமாகும்.

இரஷ்ய டிராக்டர்களைத் தற்போது விற்பனை செய்துவரும் நான்கு ஏஜெண்டுகள், பழுது பார்க்கும் நிலையங்களை ஏற்படுத்த இலட்சக்கணக்கான ரூபாய்ச் செலவிட்டிருக்கின்றனர். தங்களிடமிருந்து ஏஜென்சியை எடுத்துவிடக் கூடாதென அவர்கள் கோருகின்றனர். அப்படி ஏஜென்சியை எடுத்துவிடுவதாக இருந்தால், தாங்கள் கட்டியுள்ள பழுது பார்க்கும் நிலையங்களையும், தங்களிடமுள்ள இரஷ்யாவில் பயிற்சி பெற்ற ஊழியர்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஓர் ஏஜெண்டு கூறியிருக்கிறார்.

இந்தத் தகராறு காரணமாக சென்ற அக்டோபருக்குப் பிறகு இரஷ்ய டிராக்டருக்கு இந்திய அரசு இறக்குமதி லைசென்சு தராமலிருந்து வருகிறது.

இந்தியாவில் 12,000 டிராக்டர்கள் உற்பத்தியாகின்றன; இரஷ்யாவிலிருந்து 6,000 டிராக்டர்கள் இறக்குமதியாகின்றன.

இறக்குமதியாகும் டிராக்டருக்கு உதிரிப் பாகங்களுடன் ரூ. 8,000 முதல் ரூ. 9,000-வரை விலை ஆகும். உள்ளூர் டிராக்டர்களை விட 40 சதவிகிதம் மலிவாயிருக்கிறது. எனவே, அயல்நாட்டு டிராக்டர்களுக்கு நல்ல கிராக்கியிருக்கிறது. மனுச் செய்துகொண்டு 9 மாதம் முதல் 3 ஆண்டுவரை காத்திருக்க வேண்டியுள்ளது.

அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேஷன் கேட்டுக்கொண்டதன் பேரில், இரஷ்ய டிராக்டர்களை விற்கும் ஏஜெண்டுகள், முன்கூட்டியே 'ஆர்டர்' ஏற்றுக்கொள்ளுவதை நிறுத்திவைத்திருக்கிறார்கள். அவர்கள், நில அடமானப் பாங்கிகள் மூலம் 30 சதவிகிதமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 30 சதவிகிதமும், தனிப்பட்ட வாடிக்கைக்காரர்களுக்கு 30 சதவிகிதமும் விற்கிறார்கள்.

ஏஜெண்டுகள் விற்கும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து வாங்கிய பிறகு, உடனேயேகூட வேறு யாருக்காவது விற்கும்போது அந்த விலைக்குக் கட்டுப்பாடு இல்லை. சாதாரண விலையைப் போல் இரண்டு மூன்று மடங்குக்குக்கூட விலை போகின்றன.

ஆந்திரத்தைச் சேர்ந்த ஒருவர், தாம் ரூ. 15,000-க்கு வாங்கிய பழைய டிராக்டர் ஒன்றை ஆறே மாதத்தில் ரூ. 18,000-க்கு விற்றுவிட்டதாகக் கூறுகிறார்.

தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் ஏஜெண்டுகள் விற்கும் அயல்நாட்டு டிராக்டர்களை அதிக விலை கொடுத்து உடனே வாங்கிக்கொள்ளப் பலர் காத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த டிராக்டர்களை பஞ்சாப் அல்லது ஆந்திரத்தில் உள்ளவர்கள் வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

தஞ்சை விவசாயிகளுக்கு விற்கப்பட்ட சில டிராக்டர்கள் காஷ்மீரில் காணப்படுகின்றன.

நிற்க, இரஷ்யாவிலிருந்து உறுப்புகளைத் தருவித்து இங்கே அவற்றை முழு டிராக்டர்களாகப் பூட்டவும், பின்னர் படிப்படியாக இங்கேயே உற்பத்தி செய்யவும், சென்னை கம்பெனி ஒன்றும், காஜியாபாத்தைச் சேர்ந்த ஒரு கம்பெனியும் இரு இரஷ்ய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன; இது சம்பந்தமாகவும் இன்னமும் இந்திய அரசு முடிவு எடுக்கவில்லை.

பத்தாண்டில் ஜப்பான் அடைந்த வளர்ச்சி

உற்பத்தி நான்கு மடங்காக அதிகரிப்பு

உலகிலேயே மூன்றாவது இடத்தைப் பெறுகிறது

டோக்கியோ, ஜூலை 26—
கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் ஜப்பானின் மொத்த தேசிய உற்பத்தி ஏறக்குறைய நான்கு மடங்காகிவிட்டது.

இவ்வாண்டில் உலகத்திலேயே மூன்றாவது பெரிய உற்பத்தித் தொழில் நாடாகிவிடும் நிலையில் அது இருக்கிறது.

ஜப்பான் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் காணப்படுகிறது.

உற்பத்தியிலும், தொழில்துறை பணியிலும், முதலாவது அமெரிக்கா—இரண்டாவது சோவியத் யூனியன்—மூன்றாவது ஜப்பான் இடம் பெற்றுள்ளன.

கம்யூனிஸ்டு அல்லாத உலகில், வர்த்தகத்தில் ஜப்பான் ஆறாவது பெரிய நாடு. மொத்த ஏற்றுமதியில் 5.5 சதவிகிதம் ஜப்பானுடையது.

மேம்பாட்டு நிதி உதவிக் குழு நாடுகள் வழங்கிய மொத்த சப்ளையில் ஜப்பானின் பங்கு 1957-ல் 1.8 சதவிகிதமாக இருந்தது; 1967-ல் அது, 6.8 சதவிகிதம் ஆகிவிட்டது.

ஜப்பானின் தனி நபர் தேசிய வருமானம் இன்னமும் குறைவாகவே இருக்கிறது; ஆனால், தொழில் உற்பத்தியும், தொழில் நுட்ப வளர்ச்சியும் உயர்ந்த அளவை எட்டியுள்ளன.

இங்கிலையில், 'உலகத்தில் ஜப்பான் ஆற்றவேண்டிய பங்கு மிகப் பெரியது ஆகும்' என்று அறிக்கை கூறுகிறது.

1957-ல் ஜப்பானின் மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பு சுமார் 3,000-கோடி டாலர் (ரூ. 22,500-கோடி) ஆக இருந்தது; அப்போதிலிருந்து ஆண்டுதோறும் சராசரி 15-சதவிகிதம் அதிகரித்துவந்துள்ளது. (விலையை நிலைப்படுத்தியபின், இது 10-சதவிகிதம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது).

1967-ல் தேசிய உற்பத்தியின் மதிப்பு 11,570-கோடி டாலர் (சுமார் ரூ. 86,775-கோடி) ஆகிவிட்டது!

நாடாளுமன்ற ஆட்சி முறையைப் பின்பற்ற முடிவு

நாகர் கலகக்காரர்கள் நிலைமை என்ன?

கோஹிமா, ஜூலை 26—
அதிபரை அரசு தலைவராகக் கொண்ட நாடாளுமன்ற ஆட்சி முறையை மீண்டும் பின்பற்றுவதென நாகா கலகக்காரர்கள் முடிவு செய்தனர்.

நாகா கலகக்காரர்களின் 'தேசிய அசெம்பிளி', நகல் அரசியல் சட்டம் ஒன்றை அங்கீகரித்தது; நாடாளுமன்ற ஆட்சி முறையைப் பின்பற்ற அரசியல் சட்டம் வகைசெய்கிறது.

புதிய அரசியல் சட்டத்தின்படி அதிபருக்கு உதவியாக அமைச்சரவை ஒன்று இருக்குமாம்.

பாசனத்துக்கு பவானி--அமராவதி நீர்

ஆகஸ்டு முதல் நாள் திறந்துவிடப்படும்

குறிப்பிட்ட காலத்துக்குள் வேலைகளை முடித்துக்கொள்ள அமைச்சர் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 26—
கீழ்பவானி முக்கியக் கால்வாயிலும் அதன் தொடர்க் கால்வாயிலும் ஆகஸ்டு முதல் நாளிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் விடுவதென்று மாநில அரசு முடிவு செய்திருக்கிறது.

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி இதை அறிவித்தார்.

"நடப்புப் பசலியில் முதலாவது முறைப் பாசன காலத்தில் இதில் தண்ணீர் விடப்படும்; 1969 ஜுன் 31-ந் தேதிக்குள் தண்ணீர் நிறுத்தப்படும்; அதற்கேற்ப விவசாயிகள் சாகுபடியைத் திட்டமிட்டு அமைத்துக்கொள்ள வேண்டும்"

என்றும் அமைச்சர் குறிப்பிட்டுவிட்டு, மேலும் தெரிவித்ததாவது:-

"அமராவதி நீர்த் தேக்கத்தின் தலைக் கால்வாயை ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து 1969 சனவரி 1-ந்தேதி வரை பாசனத்திற்குத் திறந்துவிட அரசு தீர்மானித்திருக்கிறது. ஏற்கனவே ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிலங்கள் முழுவதும் இதனால் பாசன வசதி பெறும்.

இங்கப் பகுதியில் குறுகிய காலப் பயிர்களைத்தான் பயிர் செய்ய வேண்டும்; ஆனால் கரும்புக்கென்று குறிக்கப்பட்ட பகுதிகளில் கரும்பு பயிரிட அனுமதிக்கப்படும்.

1969 சனவரி 31-ந்தேதிக்குப் பிறகு தண்ணீர் விடப்படமாட்டாது. இதற்கேற்ற வகையில் உழவர் பெருமக்கள் பயிரிடு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்"

தொழில் துவங்குவதில் டில்லியின் போக்கு!

காங்கிரசு முதல்வரே கண்டிக்கிறார்

பெங்களூர், ஜூலை 26—
"தொழில்களில் முதலீடு செய்வதில் வட்டார மனப்பான்மை, அரசியல் நிர்ப்பந்தம், ஏகபோகப் போக்கு முதலியன குறுக்கிடுவது நாட்டிற்குப் பெரும் தீங்கு ஆகும்"

என்று, மைசூர் முதல் அமைச்சர் வீரேந்திர பாட்டில் எச்சரித்துள்ளார்.

"மூலப் பொருள்கள், தொழில் நுட்பத் திறமை ஆகியவை கிடைப்பது — தொழிலுக்கேற்ற சூழ்நிலை ஆகியவற்றைக் கவனித்தே ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்"

என்றும் அவர் சொன்னார்.

புதிய தொழில்களுக்கு லைசென்சு அளிக்க இப்போது பின்பற்றப்படும் நடைமுறைகளையும் அவர் கண்டித்தார்.

பணம், தொழில் நுட்பம் ஆகியவைகளுக்கு அந்நிய நாடுகளையே அளவுக்கு மீறி நம்பிக் கொண்டிருப்பது பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—

"இதுபற்றிப் பரிசீலனை தேவை; இதனால் உள்நாட்டில் ஓரளவு மெத்தனம் ஏற்பட்டுள்ளது; உள்நாட்டில் தொழில் திறமையை அதிகரிக்க முயற்சி செய்யவேண்டும்.

"கிராமப் பகுதிகளில் தொழில்களை ஏற்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும்; அப்போதுதான் சீரான பொருளாதார நிலையை எய்த முடியும்."

உணவுக் கட்டுப்பாடு நீங்குமா?

"முடிவாகக் கிடைத்த கணக்குப்படி 1967—68-ல் அனைத்திந்தியாவிலும் உற்பத்தியான தானியங்களின் அளவு 956 இலட்சம் டன்களாகும்"

என்று நாடாளுமன்றத்தில், உணவுத் துறைத் துணை அமைச்சர் ஷிண்டே தெரிவித்தார்.

இவ்வாண்டில் 379 இலட்சம் டன் அரிசியும், 166 இலட்சம் டன் கோதுமையும், 122 இலட்சம் டன் பயறு வகைகளும், 289 இலட்சம் டன் மற்ற தானியங்களும் உற்பத்தியாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

"உணவுக் கட்டுப்பாடு நீடித்து வருவது பற்றி, அடுத்து கூடவிருக்கும் முதலமைச்சர்கள் மாநாட்டில் பரிசீலனை செய்யப்படக்கூடும்" என்ற தகவலையும் அவர் தெரிவித்தார்.

பொள்ளாச்சி நகர தி.மு.க. கிளை மறுதேர்தல்

பொள்ளாச்சி நகர தி. மு. க. கிளையில் நடைபெற்ற தேர்தலையொட்டி எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளின் பேரில், தலைமைக் கழகம் பரிசீலனை செய்து, கிளையின் கீழ்க் காணும் பொறுப்புகளுக்கான மறுதேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்படுகிறது.

மறு தேர்தல், 30—7—68 செவ்வாய் காலை 10-மணிக்கு வெங்கடேசா காலனியில், தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அவைத் தலைவர்
செயலாளர்
துணைச் செயலாளர்
வட்டப் பிரதிநிதிகள் ஐந்து பேர்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கழகச் சட்ட திட்டம்

விதி 25--தேர்தல் பிரிவு 5 திருத்தம்

கழகச் சட்ட திட்டம் விதி 25 — தேர்தல் - பிரிவு 5 கீழ்க் காணும் வகையில் திருத்தப்படுகிறது.

சிற்றூர், பேரூர், நகர உட்கிளை, பெருநகர உட்கிளை ஆகிய அமைப்புக்களின் அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மேலமைப்புப் பிரதிநிதிகள், செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர், தொடர்ந்து ஐந்தாண்டுக்காலம் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை.

நகரக் கிளை, பெருநகரக் கிளை, வட்டக் கழகம் ஆகிய அமைப்புகளின் அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மேலமைப்புப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்குப் போட்டியிடும் தோழர்கள், தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கழகத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

நகரக் கிளை, பெருநகரக் கிளை, வட்டக் கழகம் ஆகிய அமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்களாகப் போட்டியிடும் தோழர்கள், கழகத்தில் தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை.

‘ அறிவகம் ’
சென்னை-13,
25—7—’68

---அண்ணுதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க

கழகத் தேர்தல்

முக்கிய அறிவிப்பு

கழகச் சட்ட திட்டம் விதி 25--- பிரிவு 5-இல் திருத்தம் செய்து கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கைக்கேற்ப, ஆகஸ்டு 3, 4 ஆகிய நாட்களில் நடைபெறும் வட்டக் கழகத் தேர்தலில், செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்குப் போட்டியிட விரும்பும் தோழர்கள், தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கழகத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

வட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்காக ஏற்கனவே தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பத் தாள்கள் அனுப்பியிருக்கும் தோழர்கள் தவிர, அந்தந்த வட்டக் கழகத் தேர்தல்களை நடத்திவைக்கத் தலைமைக் கழகத்தால் அனுப்பிவைக்கப்படும் ஆணையாளரிடம் தேர்தல் நாளன்று நேரிலேயே தேர்தல் துவங்குவதற்கு முன்பாக விண்ணப்பத் தாள்களைக் கொடுத்து செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலில் பங்கு கொள்ளலாம்.

வட்டச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான விண்ணப்பத் தாள்கள் தவிர வேறு பொறுப்புக்கான விண்ணப்பத் தாள்களை, ஆணையாளர், தேர்தல் நாளன்று நேரில் பெற்றுக் கொள்ளமாட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கோவை நகர

4, 8-ஆகிய வார்டுகளில் மறுதேர்தல்

ஏற்கனவே அறிவித்திருந்த அறிவிப்பையொட்டி, கோவை நகர 4-வது வார்டு உட்கிளையின் எல்லாப் பொறுப்புக்களுக்கும், 8-வது வார்டு கிளையில் தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் ஆணையாளரின் பரிசீலனைமீது மறு தேர்தல் எந்தெந்தப் பொறுப்புக்கு நடைபெறவேண்டும் என்று தெரிவிக்கப்படும் அந்தப் பொறுப்புக்களுக்கும் 28-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு அந்தந்த வார்டுகளின் பொதுவான இடத்தில் தலைமைக் கழக ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் மறு தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வ.ஆ.மாவட்ட தி.மு.க. நகர--கிளைகளின் தேர்தல்கள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி, வ. ஆ. மாவட்டத்தின் கீழ்க்காணும் கிளைகளுக்கான தேர்தல்கள் --- கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆணையாளர்கள் தலைமையிலும், கீழ்க் குறிப்பிட்டுள்ள இடத்திலும் நேரத்திலும் நடைபெறும் :—

28—7—68

இராணிப்பேட்டை

ஆணையாளர் : பெ. தா. ஈசுவரப்பன்
இடம் : பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

திருப்பத்தூர்

ஆணையாளர் : எம். எஸ். இராதாகிருஷ்ணன்
இடம் : பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

திருவண்ணுமலை

ஆணையாளர் : இரா. தர்மலிங்கம்
இடம் : பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

குடியேற்றம்

ஆணையாளர் : மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம் : பயனியர் விடுதி
நேரம் : மாலை 4-மணி

கலசப்பாக்கம்

ஆணையாளர் : பி. கே. முனுசாமி
இடம் : கழகப் பணிமனை
நேரம் : காலை10-மணி

30—7—68

அரக்கோணம்

ஆணையாளர் : மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம் : பயனியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

முக்கியத் திருத்தம்

நேற்றைய இதழில் வ. ஆ. மாவட்ட தி. மு. க. நகர--கிளைகளின் தேர்தல்கள் தொடர்பான அறிவிப்பில்,

28--7--68-ல்

நடைபெறவேண்டிய **இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணுமலை, குடியேற்றம், கலசப்பாக்கம்** ஆகிய நகரக் கிளைகளின் தேர்தல் 30—7—68-ல் நடைபெறுவதாகத் தவருக அச்சாகிவிட்டன. மேற்சொன்ன தேர்தல்கள் 28—7—68-ல்தான் நடைபெறும். அரக்கோணம் தேர்தல் மட்டும் 30—7—68-ல் நடைபெறும். தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்.

—(ஆ-ர்.)

பெரம்பலூர் தி. மு. க. மறுதேர்தல்

‘ஏற்கனவே அறிவித்திருந்த ‘அறிவிப்பைத் தொடர்ந்து பெரம்பலூர் தி. மு. கழக மறுதேர்தல் ஜூலைத் திங்கள் 29-ம் நாள் காலை 10-மணிக்கு பெரம்பலூர் கழகக் கட்டிடத்தில், தோழர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெறும்’’

என திருச்சி மாவட்டச் செயலாளர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

குருவரெட்டியூர் எம்.ஜி.ஆர். மன்றம்

பள்ளிப் பிள்ளைகட்கு சீருடை வழங்கியது

குருவரெட்டியூர் எம். ஜி. ஆர். மன்றத்தின் சார்பில் அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் குழந்தைகள் 40 பேருக்கும், தண்ணீர்ப் பந்தல்பாளையம் பள்ளியில் உள்ள குழந்தைகளில் 20 பேருக்கும் இலவசமாகச் சீருடையும், உணவும் அளிக்கப்பட்டது.

சேலத்தில் குடிநீர்க் குழாய்கள் திறப்பு

கழக நகராட்சி உறுப்பினர் பணிகட்குப் பாராட்டு

சேலம், ஜூலை 25—

சேலம் 27-வது வட்டத்தில் குடிநீர்க் குழாய்த் திறப்புவிழா நடைபெற்றது; விழாவிற்கு திரு. இரா. கந்தசாமி தலைமை வகித்தார்.

27-வது வட்டத்தின் பல பகுதிகளில் 10 குடிநீர்க் குழாய்களை கழக சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், கே. ஜெயராமன் ஆகியோர் திறந்துவைத்து, இந்த வட்ட நகரமன்ற உறுப்பினர் திரு. சி, பழனியப்பன் (தி.மு.க.) அவர்களின் தொண்டுகளைப் பாராட்டினர்.

நகர மன்ற உறுப்பினர் பி. எஸ் மாணிக்கம், திருமலை, க. அன்புமணி, ப. இராமசாமி, எஸ். முத்துசாமி, சி. சின்னுகவுண்டர், வி. எம். பொன்னுசாமி, மு. சுந்தரம், கே. நாராயணன், சி. கோபால், கே. அங்கமுத்து ஆகியோரும் பேசினர்.

நகரமன்ற உறுப்பினர் சி. பழனியப்பன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பண்ருட்டி நகர தி.மு.க. கிளை தேர்தல்

ஆணையாளர்
ப. உ. சண்முகம் எம்.எல்.சி.

ஏற்கனவே அறிவித்திருந்ததையொட்டி, பண்ருட்டி நகர தி.மு.க. கிளையின் தேர்தல் 30—7—68 செவ்வாய் காலை 10 மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் திரு. ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

உடுமலைப்பேட்டை தி. மு. க. கிளை மறுதேர்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி உடுமலைப்பேட்டை தி.மு.க. கிளையில் தேர்ந்தெடுக்கவேண்டிய அவைத் தலைவர், வட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புக்களுக்கான மறு தேர்தல், 28—7—68 ஞாயிறு காலை 10 மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கே. கோவிந்தசாமி எம.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திண்டிவனம் தி. மு. க. கிளை மறு தேர்தல்

தெ. ஆ. மாவட்டம் திண்டிவனம் தி.மு.க. கிளையின் எல்லாப் பொறுப்புகளுக்குமான மறு தேர்தல், 30—7—68 செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தோழர் ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்திவைப்பார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

ஆலந்தூர் நகர தி. மு. க. கிளை தேர்தல்

ஆலந்தூர் நகர தி. மு. க. கிளையின் தேர்தல் 28—7—68 காலை 10-மணிக்கு ஆதம்பாக்கம் ஜனோபகார சாசுவத நிதி பள்ளிக் கட்டிடத்தில், தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கரூர் நகர தி.மு.க. கிளைத் தேர்தல்

“ஏற்கனவே விடுத்த அறிவிப்பையொட்டி கரூர் நகர தி. மு. க. கிளைத் தேர்தல் 30—7—68 காலை 10 மணிக்கு கரூர் நகர டாக்கி-டாக் தியேட்டரில் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.’’

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தோப்புத்துறை தி.மு.க. கிளை மறுதேர்தல்

“தஞ்சை மாவட்டம் தோப்புத்துறை தி. மு. க. கிளையின் மறுதேர்தல், 30-7-68 காலை 10-மணிக்கு நாகை வட்டச் செயலாளர் அ. இராசகோபால் அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெறும்’’

என தஞ்சை மாவட்டச் செயலாளர் ப. நாராயணசாமி அறிவிக்கிருர்.

அரியலூர் தி. மு. க. கிளை

செயலாளர் பொறுப்புக்கு மறு தேர்தல்

“அரியலூர் தி மு.க. கிளையின் செயலாளர் பொறுப்புக்கான மறுதேர்தல், 29-7-68 மாலை 4 மணிக்கு, அரியலூர் வழிப்போக்கர் விடுதியில், தோழர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களைத் தேர்தல் ஆணையாளராகக் கொண்டு நடைபெறும்’’

என மாவட்டச் செயலாளர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

மணப்பாறை நகர தி. மு. க. தேர்தல்

“ஏற்கனவே விடுத்த அறிவிப்பையொட்டி மணப்பாறை நகர தி. மு. க. கிளைத் தேர்தல் 30—7—68 காலை 10 மணிக்கு பொதுக்குழு உறுப்பினர் கு. காமாட்சி அவர்களை ஆணையாளராகக் கொண்டு மணப்பாறை பயணிகள் விடுதியில் நடைபெறும் என்பதைத் தலைமைக் கழக அனுமதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்’’

என திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிருர்.

அரண்மனைக்குறிச்சி தி.மு.க. கிளைத் தேர்தல்

“திருச்சி மாவட்டம் அரண்மனைக்குறிச்சி தி.மு.க. கிளையின் மறுதேர்தல் தலைமைக் கழக அறிவிப்பின்படி 30-7-68 பிற்பகல் 2 மணிகு நடைபெறும்’’

என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிருர்.

மதுரை கைவல்யம் நினைவுப் படிப்பகம்

மதுரை நகர் 8-வது வட்டம் தல்லாகுளம் கைவல்யம் நினைவுப் படிப்பகம்—எம்.ஜி.ஆர். இளைஞர் பகுத்தறிவு மன்றம் ஆகியவற்றின் நிர்வாகிகள் தேர்தல் 13—7—68 அன்று அ. ப. அங்கப்பன் தலைமை நடந்தது ; ம. தமிழ்மணி செயலாளராகவும், க. மு. நடராசன் துணைச் செயலாளராகவும், மு. இ. பெரியசாமி பொருளாளராகவும், மற்றும் எழுவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரங்கல்

நாரவாரிகுப்பம் பேரூராட்சி உறுப்பினரும் மகளிர் மன்றத் தலைவியுமான தோழியர் ஏ. கிருஷ்ணவேணி, 19—7—68 அன்று இயற்கையெய்தினர்.

20—7—68 அன்று பேரூராட்சித் தலைவர் மா. துரைசாமி தலைமையில் நடந்த இரங்கற் கூட்டத்தில் அ. பொ. அரசு எம்.எல்.ஏ., பி. ஆர். அண்ணுமலை, எஸ். தேவராசன், அ. கதிர்வேலன், எம். கே. கணேசன், ஏ. கெங்காதரன், ஏ. சண்முகம், எஸ். பி. செயவேலு, பி. சுந்தரமூர்த்தி, மா. பொ. வேதாசலம் ஆகியோர் அம்மையாரின் தொண்டைப் பாராட்டிப் பேசினர்.

மதுவிலக்குக்கொள்கையில் காங்கிரசாரின் 'மயக்கம்'!

மேலிடத்திலேயே ஒன்றுபட்ட கருத்தில்லை

மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கும் தலைவர்களின் போக்குக்கு எதிர்ப்பு

காங்கிரசு ஆட்சிமன்றக் கூட்டத்தில் கடும் கண்டனம்

புதுடில்லி, சூலை 26—

''மதுவிலக்குக் கொள்கை சம்பந்தமாகக் காங்கிரசார், 'சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக'ச் செயல்படுவது குறித்து விவாதிக்க வேண்டும்'' என்று சில முதிய காங்கிரசு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, காங்கிரசு ஆட்சிமன்றக் குழு, தனிக் கூட்டமொன்றைக் கூட்டியது.

விவாதத்தில் கலந்துகொண்ட டாக்டர் சுசீலா நய்யார், அக்பர் அலிகான் ஆகிய இருவரும், காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா மதுவிலக்கைக் கைவிடும் தோரணையில் பேசிக்கொண்டிருப்பதாகவும், ஆனல் துணைத் தலைமைமமைச்சர் மொரார்ஜி தேசாய் அதற்கு மாருன கருத்துக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினர்.

காங்கிரசார் ஒரே' கருத்துக் கொண்டவர்கள் என்பதைக் காட்டி, 'மக்களிடை நிலவிவரும் குழப்பத்தை நீக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது' என்று அவர்கள் எடுத்துக் கூறினர்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பான்மையோர், மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்றும், மத்திய–மாநில அரசுகள் இதற்காக முழு மனத்துடன் செயல்பட வேண்டுமென்றும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

அடுத்த அ. இ. கா. க. கூட்டத்தில் மதுவிலக்குப்பற்றி விவாதிக்கலாம் என்றும், உறுப்பினர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்க முழு வாய்ப்பளிக்கப்படுவர் என்றும் இந்திராகாந்தி கூறியதாகத் தெரிகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் அ. இ. கா. க. உறுப்பினர்களல்லர் என்றும், மதுவிலக்குச் சட்டத்தை செயல்படுத்தவேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்தைச் சேர்ந்ததாகையால், நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர்களின் கூட்டமொன்றைக் கூட்டி இதை விவாதிக்கவேண்டுமென்றும் சிலர் கூறியிருக்கின்றனர்.

மூன்ருண்டுகளாகக் கூட்டம் கூடாததேன்?

விவாதத்தைத் துவக்கிவைத்த மணிபாய் பட்டேல், கூறியதாவது:—

"உள்துறை அமைச்சு அலுவலகத்தில் அமைந்துள்ள மதுவிலக்கு போர்டு, கடந்த மூன்ருண்டுகளாகக் கூட்டமே நடத்தவில்லை. வருமானத்தைக் கருதி மதுவிலக்கைக் கைவிடவேண்டுமென்ற வாதம், ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மதுவிலக்கால் இழந்துபட வேண்டிய வருமானத்தை, வருமான வரி—விற்பனை வரி—வாகன வரி போன்றவற்றை உயர்த்துவதன்மூலம் ஈடுகட்டிக்கொள்ள முடியும்."

பட்டம் யாருக்கு?

பி. பி. வர்மா எனும் உறுப்பினர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மது வகைகளை உற்பத்தி செய்பவர்கட்கு 'பத்மஸ்ரீ' பட்டத்தைக்கூட அரசு வழங்கியிருக்கிறது."

காந்தியார் கொள்கை கைவிடப்பட்டது

சேத் கோவிந்ததாஸ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காந்தியாரின் எல்லா அறிவுரைகளையும், காங்கிரசு கைவிட்டுவிட்டது"

மதுவிலக்கைக் கைவிட நொண்டிச் சாக்கு

என். பி. சி. நாயுடு என்பவர் பேசுகையில், 'மதுவிலக்கை உடனடியாகக் கைவிடுமாறு வற்புறுத்தினர்.

குடிக்கும் அதிகாரிகள்

திருமதி சுசேதா கிருபளானி, பேசுகையில், 'கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவதை, மதுவிலக்கைக் கைவிடுவதற்கு ஒரு காரணமாகக் காட்டக்கூடாது' என்று கூறினர்.

உயர்தர அதிகாரிகளின் பகிரங்கமாக மது அருந்தும் பழக்கத்தைக் கண்டித்த டாக்டர் சுசிலா நய்யார், 'இப்பழக்கத்துக்குத் தடை விதிக்கப்பட வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தைப் பாரீர்!

தமிழ்நாட்டிலும், குசராத்திலும் மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுவிலக்கைச் செயல்படுத்தும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப் படுகிறதோ, அவர் அதில் நம்பிக்கையுள்ளவராக இருந்தால் — மதுவிலக்கு வெற்றி பெற்றுவிடும்.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு—மோதுதல் இருக்கக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.''

அரசு எச்சரிக்கையையும் மீறி விடுமுறை எடுத்தனர்

கேரளத் தலைமைச் செயலக ஊழியர் அறப்போர்

ஈடுபட்ட 700 பேர் மீதும் நடவடிக்கை

திருவனந்தபுரம், சூலை 26—

கேரள அரசின் கடுமையான எச்சரிக்கைக்குப் பிறகும், கேரளத் தலைமைச் செயலக ஊழியர்கள், மொத்தமாக இன்று அவசர விடுமுறை எடுத்தனர்.

ஏறக்குறைய 700 பேர் இன்று விடுமுறை எடுத்தனர். அவர்களின் விடுமுறை விண்ணப்பங்களை அரசு நிராகரித்துவிட்டது.

100 சூப்பிரண்டெண்டுகளும், 600 உதவியாளர்களும், மற்றும் 'லிப்டு' இயக்குபவர்கள்-பைண்டர்கள் ஆகியோரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் செயலகத்தின் நான்கு வாயில்களிலும் மறியல் நடத்தினர்.

நிதி, சட்டம், சட்டமன்றம், பொதுமக்கள் தொடர்பு, கருவூலத் துறை ஆகியவை இதனல் பாதிக்கப்படவில்லை.

செயலக ஊழியர் சங்கத்தில் உறுப்பினரல்லாத தட்டெழுத்தர்களும், சுருக்கெழுத்தாளர்களும், கடைநிலை ஊழியர்களும் தவிர, எல்லா அரசு ஊழியர்களும் இன்று விடுமுறை எடுத்திருக்கின்றனர்.

துணைச் செயலாளர்களும், அதற்கு மேலாசவும் உள்ள அதிகாரிகள் மட்டுமே இன்று அலுவலகம் வந்திருந்தனர்.

செயலகப் பகுதியில் பலத்த போலீசுப் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது.

இன்று சட்ட விரோதமான முறையில் கூட்டாக விடுமுறை எடுத்த ஊழியர்களின் முன் சர்வீசு ரத்து செய்யப்பட்டு, அவர்கள், 'புதிதாக வந்தவர்கள்' எனக் கருதப்படுவர் என்றும், சம்பளம், மற்றும் சலுகைகள் இதன் அடிப்படையில்தான் தரப்படுமென்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

முகவரி மாற்றம்

எஸ். முத்து, எம்.எல்.சி., செயலாளர், மதுரை மாவட்ட தி.மு.க., 224-ஏ, மேலமாசி வீதி, மதுரை-1.

நன்கொடைத் தடுப்பு மசோதா நிறைவேறுமா?

சில காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அச்சம்

செல்வாக்கு மிக்க தலைவர்களின் முயற்சி பற்றிக் கட்சித் தலைவருக்குக் கடிதம்

புதுடில்லி, சூலை 26—

கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகள் தருவதைத் தடை செய்யும் அரசு மசோதாவைத் திரும்பப்பெற வேண்டுமென்று செல்வாக்குள்ள சில காங்கிரசுத் தலைவர்கள் முயற்சிப்பதாக வரும் தகவல்கள் குறித்துக் கவலை தெரிவிதது, 21 காங்கிரசு எம்.பி.-க்கள், காங்கிரசு நாடாளுமன்றக் கட்சித் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளனர்.

அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடைகள் அளிப்பதை அனுமதிப்பதனல் ஏற்படும் அபாயகரமான விளைவுகள் பற்றி ஏராளமான உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றன; இதனையெல்லாம் இக்கடிதம் எடுத்துக்காட்டியிருக்கிறது.

"இத்தகைய நன்கொடைகளின் மூலம் சுயநல சக்திகளுக்கு உண்டாகும் செல்வாக்கு, சனநாயகத்திற்கும், சோஷலிசத்திற்கும் மிகப் பெரும் அபாயமாகும்'' என்று இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருககிறது.

''மக்களவையில் அரசு அளித்த ஒரு வாக்குறுதியின்மீது, கம்பெனிகள் நன்கொடை தருவதைத் தடைசெய்யும் இம்மசோதா கொண்டுவரப்பட்டது; எனவே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்த மசோதாவை விரைவில் விவாதத்திற்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்'' என்று இக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிருர்கள்.

நடக்க இருப்பவை

29--7--68

குருவிநத்தம்

தி மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு மாரியம்மன் திடலில்; தலைவர்: கோ. வேணுகோபால்; பேசுவோர்: சி. தமிழரசி, எம். ஏ. சண்முகம், கோ. தனபால், எம். கிருஷ்ணமூர்த்தி. எம். இராமச்சந்திரன், பி. ஆதிமூலம், எம். பெருமாள், கோ. வெங்கடேசன், என். இராமசாமி, எஸ். கதிர்வேலு, ஆனந்தன். (கிருஷ்ணன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திண்டுக்கல்

எம். ஜி. ஆர். மன்றத் துவக்க விழா; மாலை 6-மணிக்கு நெட்டுத் தெருவில்; தலைவர்: எம். எஸ். மணி; பேசுவோர்: மு. தமீம், மு. காதர்சா, பொன். சீனிவாசன். நா. தயாநிதி, கலைமணி: அண்ணு படத் திறப்பாளர்: அ. தங்கவேல்; எம். ஜி. ஆர். படத் திறப்பாளர்: க.வே.வி. இராசன்.

தொளசம்பட்டி

தி. மு. க சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: பி. இராசகோபால்; பேசுவோர்: இரா. வெற்றி கொண்டான், கே. ஆர். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ஆர். எஸ். மணி, தண்டபாணி, எம். பழனியப்பன், டி. ஏ. சொக்கலிங்கம், கு. கந்தசாமி, கே.எஸ். இராசன், வி. அண்ணுமலை.

மாநகராட்சிப் பூங்கா திறப்பு விழா

சென்னை 36-வது வட்டம் அங்காளம்மன்கோயில் தெருவில் புதுப்பிக்கப்பட்ட பக்தவத்சலு நாயுடு பூங்காவை, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் திறந்துவைப்பார்; புதிதாகக் கட்டப்பட்டுள்ள குளிர் நீர் வழங்கு சாதனத்தை தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் திறந்து வைப்பார்; இந்த விழா, 29-7-68 மாலை 6-மணிக்கு துணை மேயர் பவளவண்ணன் தலைமையிலும் -- அமைச்சர் மதியழகன் முன்னிலையிலும் நடைபெறும்.

பட்டுக்கோட்டை நகர தி. மு. க. தேர்தல்

ஆணையாளர்

அ. நடராசன்

28--7--68 காலை 10 மணிச்கு நடைபெறவிருக்கும் பட்டுக்கோட்டை நகர தி.மு.க. தேர்தல் ஆணையாளராகத் தலைமைக் கழகச் சார்பில் திரு. அ. நடராசன் (திருச்சி நகர தி மு.க. செயலாளர்) அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

—தலைமைக் கழகம் (தி.மு.க)

வட்ட -- பெருநகர கழகத் தேர்தல்

வேட்பாளர்கள் கவனிக்க:

வட்டக் கழகம்—வட்டத் தகுதி பெற்ற பெருநகரக் கழகம் ஆகிய அமைப்புகளின் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விண்ணப்பத் தாள்களை பரிசீலனை முடித்த, சூலை 29, 30-ஆம் நாட்களில் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

ஆலந்தூர் நகர தி.மு.க. தேர்தல்

ஆணையாளர்

எம்.எஸ். இராமச்சந்திரன்

28—7—68-ல் நடைபெறும் ஆலந்தூர் நகர தி மு.க.கிளைத் தேர்தலுக்கு ஆணையாளராக எழும்பூர் பகுதிக் கழகச் செயலாளர் எம். எஸ். இராமச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சாத்தூர் தி.மு.க. கிளை

தேர்தல் விசாரணை

''சாத்தூர் தி.மு.க. கிளைத் தேர்தலையொட்டி, எழுப்பப்பட்ட ஆட்சேபனை குறித்து சம்பந்தப்பட்ட தோழர்களைக் கூட்டி விசாரணை நடத்தி, அவசியப்பட்டால் அன்றே மறுதேர்தல் நடத்தும்படியாகத் தலைமைக் கழகத்தை கேட்டுக்கொண்டதன்பேரில், கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள், 29-7-68 காலை 10 மணிக்கு சாத்தூர் வருகிருர்.

''சாததூர் தி.மு.க. கிளை உறுப்பினர்கள் அனைவரும் 29-7-68 காலை 10 மணிக்கு, சாத்தூர் பயணியர் விடுதியில் அமைப்புச் செயலாளர் முன்னிலையில் நடைபெறும் விசாரணைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்தறிவிப்பதுடன், விசாரணைக் கூட்டத்தில் அவசியம் எனக் கருதப்பட்டால் அன்றே நடைபெறவிருக்கும் சாத்தூர் தி.மு.க. கிளை மறுதேர்தல் கூட்டத்திலும் தவருது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்''

என்று, இராமநாதபுர மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக; திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.